//அவசரம்// தேர்வுகள் உடனடி கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3690 /ஆ4 /2021-2022, நாள் : 24.03.2022

பொருள்: தேர்வுகள் - மே 2022, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் - பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை பதிவேற்றம் செய்வதற்கு கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் (ம) தேர்வுக் கட்டணம் செலுத்துதல் - தொடர்பாக.

பார்வை : சென்னை- 6. அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.019373/ /எப்1/2022, நாள்: 19.01.2022, 02.02.2022 மற்றும் 23.03.2022.

########

பார்வையில் காணும் செயல்முறைகள் மற்றும் கடிதங்களின் வாயிலாக மே 2022 பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்வதற்கும், திருத்தங்கள் மேற்கொள்வதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

தற்போது மே 2022 பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலில் விடுபட்ட மாணவர்களது பெயரை புதிதாக சேர்ப்பதற்கு 28.03.2022 முதல் 30.03.2022 வரையிலான நாட்களில் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது.

1. உயர்நிலை / மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் EMIS -ல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User Id மற்றும் Password-ஐ பயன்படுத்தி, EMIS Portal-ல் சென்று தற்போது தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு / பதினோராம் வகுப்பு பயிலும் பெயர்ப்பட்டியலில் புதிதாக சேர்க்க வேண்டிய மாணவர்களது விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளனவா என்பதனை சரிபார்க்க வேண்டும்.
2. அதன்பின், DGE Portal-க்கு (www.dge.tn.gov.in / http://apply1,tndge.org) சென்று தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User Id மற்றும் Password-ஐ பயன்படுத்தி, Dashboard -ல் Pull Data Option-ஐ Click செய்ய வேண்டும்.
3. அதன்பின், Dashboard -ல் Apply Option-ஐ பயன்படுத்தி, SSLC / HSE First Year என்பதை Select செய்து பெயர்ப்பட்டியலில் புதிதாக சேர்க்க வேண்டிய மாணவர்களது பெயருக்கெதிரே உள்ள Apply Option-ஐ Click செய்து மாணவர்களது விவரங்களை சரிபார்த்தபின் Submit செய்தல் வேண்டும். இறுதியாக Declaration Form-ஐ Download செய்து கொள்ள வேண்டும்.

4. மேலும், ஏற்கனவே, EMIS Portal–ல் இருந்து DGE Portal–ல் Pull செய்யப்பட்ட பின், Apply Option–ஐ பயன்படுத்தி, பெயர்ப்பட்டியலில் சேர்க்கப்படாமல் விடுபட்ட மாணவர்கள் எவரேனும் இருப்பின் அம்மாணவர்களின் விவரங்களை Apply Option–ஐ பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட நாட்களிலேயே பெயர்ப்பட்டியலில் பதிவேற்றம் செய்யலாம்.
5. மேற்குறிப்பிட்ட நாட்களிலேயே www.karuvoolam.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி மேற்குறிப்பிட்ட மாணவர்களுக்கு தேர்வுக்கட்டணம் செலுத்துமாறும் புதிய பள்ளியாக இருப்பின் TML கட்டணம் ரூ.300/– செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் இப்பணியின் முக்கியத்துவம் அறிந்து தனிக்கவனம் செலுத்தி பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணியினை 30.03.2022–க்குள் நிறைவு செய்வதற்கும், தேர்வுக் கட்டணம் (பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு) செலுத்துவதற்கும் உரிய அறிவுரைகளை வழங்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு– பார்வைக் கடிதம்

(ஒம்.க.முனுசாமி)XXXXX
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

24/03/22

பெறுநர் :

அனைத்து வகை உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளித் –
தலைமை ஆசிரியர்கள் (ம) மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

மாவட்ட கல்வி அலுவலர்
வேலூர்.
(தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)

//ப.த.//